ORIGINAL ARTICLE

# சிறுகதையில் ஓவியம் ஓர் ஆய்வு
## [SIRUKATHAIYIL OVIYAM OOR AIYU]

# IMPORTANCE OF ILLUSTRATION DRAWINGS IN SHORT STORIES

**நாகஜோதி ஆறுமுகம் [1] / Nagagothi Arumugam [1]**
**முனீஸ்வரன் குமார் [2] / Muniisvaran Kumar [2]**

[1]ஈப்போ, பேராக், மலேசியா. / Ipoh, Perak, Malaysia.
மின்னஞ்சல் / Email: kajohaka4@gmail.com
[2]சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா. / Sultan Idris Education University, Malaysia. **மின்னஞ்சல்** / Email: muniisvaran@fbk.upsi.edu.my

**ஆய்வுச் சாரம்**

*நுண்கலைகளில் ஓவியக்கலை நுட்பமானது; மென்மையானது. ஓவியக்கலையைச் சித்திரச் செய்தி என்றும் கூறுவர். ஓவியம் பல கற்பனைக் கதைகளைச் சொல்லும். வார்த்தைகளால் விளக்க முடியாததைப் பேசா சித்திரம் விளக்கும். மொழி புரிய வைக்காத செய்தியை ஓர் ஓவியம் எளிதில் நமக்குப் புரிய வைத்துவிடும். ஒரு செய்தியைப் படித்துத் புரிந்து கொள்ள மொழி தேவை என்றால், அதே செய்தியைப் பார்த்து புரிந்து கொள்ள ஓவியமும் தேவை. மலேசிய தமிழ்ச் சிறுகதைகளில் காணப்படும் ஓவியத்தின் பங்கு என்பதே இவ்வாய்வின் கருப்பொருளாகும். தமிழ்ச் சிறுகதைகளுக்கு வரையப்படுகின்ற ஓவியங்கள் எந்த அளவிற்கு கதையின் ஓட்டத்திற்கும் கருத்துக்கும் உதவுகின்றன என்பது இவ்வாய்வில் ஆராயப்படுகிறது. சிறுகதையைப் படித்துச் சுவைக்கும் முன் படிப்போர் மனதில் சுவைபடச் செய்வது ஓவியமே. வாசகர்களின் சிந்தனையிலும் உணர்விலும் தாக்கத்தை ஏற்படுத்தி மேலும் அவர்களில் ஆர்வத்தைத் தூண்டுவது ஓவியமே. இதுவே, ஓவியம் கதைகளுக்குப் பெரும் பங்கினை அளிக்கின்றது என்பதைத் தெளிவாக்குகிறது.*

**கருச்சொற்கள்** : *ஓவியம், காட்சி வரைப்படம், சிறுகதை*

**Abstract**

Literature is an art. The painting is to tell the pictures that you want to say with a beautiful and elegant picture. It is the art of attracting, listening, and reading of the reader's mind that they are attracted to. It also stimulates the art of photography. The paintings in the painting are painted only in the form of strips made of colour before they are dyed. 'Sangam' literature refers to the drawings of such a line. The pictures depicted are a two-dimensional artwork. They are intended to make an impression. Understanding is a visualization technique. Particular drawing is aimed at clarifying the short story of readers. By describing the painting of a story, it usually describes the character or the entire story. The illustration is a visualization of a writing with drawing, painting, photography, or other art techniques that emphasize the relationship of the subject to the intended text rather than something related. The purpose of illustration is to explain or decorate a story, writing, poem, or other written information. The purpose of illustration is to decorate or explain the story, writing, poetry or other information. It also aims to give various variations in teaching materials so that it becomes more interesting, communicative, motivating, and readers can also easy to understand the message conveyed. In addition, the illustration facilitates the readers in remembering the concepts and ideas presented. The way this painting is felt is that painting works to attract readers to be interested in reading. The purpose of the illustration is to decorate or explain stories, writings, poems or other information. The illustrations painted for the short story are the subject of study to have been reviewed to prove that illustrations play an important role in the field of short story writing. The short story published without illustration is less well received among readers. Short story readers are more fond of reading short stories that have interesting illustrations. This is because, illustrations attract readers first before reading the story, Therefore, the illustration for a short story has proved that it is very important in the field of writing today.

**Keywords:** Illustration ,Short Stories, Drawing

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 10th April 2018, revised 30th Jun 2018, accepted 8th August 2018

**முன்னுரை**

*நுண்கலைகளில் ஓவியக்கலை நுட்பமானது; மென்மையானது. ஓவியக்கலையைச் சித்திரச் செய்தி என்றும் கூறுவர் (வெங்கடசாமி **2014)**[1]. ஓர் ஓவியம் பல கற்பனைக் கதைகளைச் சொல்லும். வார்த்தைகளால் விளக்க முடியாததைப் பேசா சித்திரம் விளக்கும். மொழி புரிய வைக்காத செய்தியை ஓர் ஓவியம் எளிதில் நமக்குப் புரிய வைத்துவிடும். ஒரு செய்தியைப்*

*படித்துத் புரிந்து கொள்ள மொழி தேவை என்றால், அதே செய்தியைப் பார்த்து புரிந்து கொள்ள ஓவியமும் தேவை. மலேசிய தமிழ்ச் சிறுகதைகளில் காணப்படும் ஓவியத்தின் பங்கு என்பதே இவ்வாய்வின் கருப்பொருளாகும். தமிழ்ச் சிறுகதைகளுக்கு வரையப்படுகின்ற ஓவியங்கள் எந்த அளவிற்குத் கதையின் ஓட்டத்திற்கும் கருத்துக்கும் உதவுகின்றன என்பது இவ்வாய்வில் ஆராயப்படுகிறது.*

*ஓவியம் எனப்படுவது மிகப் பழங்காலத்திலேயே தோன்றிய நுண்கலைகளில் ஒன்றாகும். ஒன்றனைப் போல் இன்னொன்று, அதாவது ஒவ்வுதல் எனும் பொருளையுடையது ஓவியம். காட்சியளவில் பார்ப்பதற்கு ஏற்ற இந்த நுண்கலையைப் பற்றி சங்கப் பாடல் கூறுகிறது. (நற்றிணைப் பாடல் **(118:7)** (செந்துரைமுத்து, **1978)**[2]. ஓவியம், இயற்கையின் தாக்கத்தாலும் அதன்பால் ஏற்படும் ஈர்ப்பாலும் வெளிப்படுகின்ற சாரங்களாகும். அந்த மென்மையான உணர்வின் எதிரொலியே ஓவியமாகும். நாம் கண்ணால் காணும் பொருள்களைச் சித்தரித்து எழுதும் கலையே ஓவியக்கலை என்றும் கூறப்படுகிறது. பண்டை மனிதன் அவன் பார்த்தவற்றையே படமாக எழுதிக் காட்டினான்; பின்பு அறிவு வளர வளர, தன் மனத்தால் பல உருவங்களையும் காட்சிகளையும் முடிவு செய்து அவற்றைப் படங்களாக வரைந்தான். எண்ணும் ஆற்றலின் சிறந்த புலவர் பெருமக்களுடைய கருத்து ஓவியங்களுக்கு உருவங்களை அமைத்தான்.*

*ஓவியர்கள் தங்களின் உள்ளத்தில் தோன்றிய உணர்வுகளை நமக்கு உணர்ந்தவாறு "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று பல்வேறு சித்திர வடிவங்களாக வெளிப்படுத்திக் காட்டுகிறார்கள். சங்க காலப் புலவர்கள், அழகாகப் புனைந்து செய்யப்பட்டுள்ள பொருட்களை அவை வீடு அல்லது ஊராயினும் ஓவியமாகக் கண்டனர் என்பதை,*

*ஓவத்தன்ன இடனுடை வரைப்பில் (புறநானூறு – 251:1)*
*(மாணிக்கனார், **1999**)*[3]
*ஓவத்தன்ன உருகெழு நெடுநகர் (பதிற்றுப்பத்து - 88)*
*(ஆலிஸ். அ, **2004**)*[4]

*இந்தச் சங்கப் பாடல் வரிகள் நமக்குக் காட்டுகின்றன. அத்துடன் மணிமேகலையில், அழகிய பூங்கா ஒன்றை ஓவியமாகக் காணுகிறது என்பது சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்*
*சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே*
*ஒப்பத் தோன்றிய உவவனம்.*
*(மணிமேகலை;மலர்வனம்புக்க காதை-170)*
*(என். சொக்கன்,**2010**)*[5]

*இவ்வாறு இயற்கை ஓவியமாகக் காட்சிப்படுத்துகிறது. அதாவது இலக்கியத்தில் காட்சிப்படுத்தல் என்பது உவமம், உருவகம், படிமம் முதலியவை மூலமாகவும் நடைபெறுகின்றது என்பதை இதன் மூலம் நாம் அறியலாம். இலக்கியம் தொடர்பான கதைகளுக்கு ஏற்ப (நெடுநல்வாடை.147). எடுத்துக்காட்டாகத் சங்காலத்தில் தலைவனைப் பிரிந்ததால் மிகுந்த ஆடை அலங்காரங்கள், புனைவுகள் இல்லாமல் வருத்தத்துடன் எளிமையாகக் காட்சியளித்த தலைமகளை (பாண்டிமாதேவி) நெடுநல்வாடை புனையா*

*ஓவியம் போல இருந்ததாகத் தெரிவிக்கிறது. ஓவியங்களை வரைவதும் இலக்கியத்தில் காட்சிப்படுத்தல் எனக் கூறப்படுகிறது.*

*வரையப்படும் உருவங்களை வண்ணங்களைக் கொண்டு தீட்டும் முன்பாக அவற்றைக் கோடுகளாக மட்டும் வரைதல் ஒரு வகை ஓவியமாகும். இத்தகைய கோடுகளாக வரையும் ஓவியங்கள் பற்றி சங்க இலக்கியம் 'புனையா ஓவியம்' எனக் குறிப்பிடுகிறது.*

*புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்*
*(நெடுநல்வாடை.147)*
*(பொதுவன், பிப்ரவரி 2018)*[6]

*இவ்வடிக்கு "வண்ணங்களைக் கொண்டெழுதப் படாத ஓவியம்" என்று பொருள் கூறுகின்றார், உரையெழுதிய நச்சினார்க்கினியர் (நச்சினார்க்கினியர்-147).*

*புனையா ஓவியதிற்கு அடுத்து, வண்ணக் கலவையிலான ஓவியங்களும் படிப்போரின் கவனத்தை ஈர்க்கும் ஆற்றலுடையவை எனக் கூறலாம். பெருப்பாலான சிறுகதைகளுக்குப் புனையா ஓவியத்தை வரைவதை விட திரவ வண்ண ஓவியங்களே வரையப்டுகின்றன. சிறுகதைகளுக்கு மட்டுமல்லாமல் கேலிச்சித்திரங்கள், துணுக்குகள், புத்தக முகப்பு அட்டைகள் போன்று இன்னும் பல துறைகளுக்கு ஓவியம் பெரும் பங்காற்றுகின்றது.*

***சிறுகதைகளில் காணப்படும் ஓவியங்கள்***

*சிறுகதை என்பது சுருக்கமானதாகவும், கதைக் கூறும் புனைவுவகை உரைநடை இலக்கியமாகும். பெரும்பாலான சிறுகதைகள் ஒரு மையக்கருவினையோ அல்லது நிகழ்ச்சியின் அனுபவத்தையோ விளக்கும் ஓர் இலக்கிய வகையாகும். சிறுகதை பொதுவாக குறும் புதினம் மற்றும் நாவலை விடச் சுருக்கமானதாகும். சிறுகதையில் கூறப்படும் கருத்துகள் உண்மை, அழகு மற்றும் இனிமை ஆகிய பண்புகளைக் கொண்டதாக இருந்தால், அவை படிப்போர்க்கு உணர்ச்சியை ஊட்டுவதோடு மனநிறைவையும் தரும். அப்படிப்பட்ட இலக்கியமான சிறுகதைகள், படிப்போரின் ஆர்வத்தையும் படிக்கும் பழக்கத்தையும் தூண்டுகிறது. சிறுகதைகளில் அனைத்து சூழலும் ஓவியமாக வரையப்படுவதில்லை. அது சிறுகதையின் கருப்பொருளை மையமாகக் கொண்டே வரையப்படுகிறது. இருப்பினும் சிறுகதைகளைப் படிப்பதற்கு முன் அதற்கு வரையப்பட்ட அந்த ஓவியம் வாசகர்களின் பார்வையைக் கவர்ந்திழுத்து உள்ளங்களைக் கொள்ளைக்கொண்டு தன்வசப்படுத்தி அச்சிறுகதையைப் படிக்கத் தூண்டுகிறது என்பது அசைக்கமுடியாத உண்மையாகும். பெரும்பாலான சிறுகதைகளில் வெளிவருகின்ற சிறுகதைகள் புனையா ஓவியத்தைப் தழுவி வரையப்பட்டதாக இவ்வாய்வின் மூலம் காணமுடிந்தது.*

*அக்காலத்திலிருந்தே ஓவியம் ஒவ்வொரு கதைக்கு ஒரு முக்கிய அம்சமாக அமைகிறது. பல நேரங்களில் ஓவியம் கதை படிக்க தூண்டும் உணர்வுகளை உள்வாங்கி காட்சியாக வரையப்படுகிறது. இக்காலத்திலும் பல சிறுகதைகளின் கதாபாத்திரங்கள் வரையப்பட்ட ஓவியங்களால் உயிர்ப்புடன் நினைவில் உலாவுகிறார்கள். இதுவே ஓவியத்தின் பெரிய வெற்றியாகக் கருத்தப்படுகிறது. இதில் மலேசிய ஓவியரான ஓவியர்*

லேனா, ஓவியர் சந்திரு, கஷ்வி, ஸ்டீவன் மற்றும் பலரின் ஓவியங்கள் உயிரோட்டமாக இருப்பதைக் காணலாம். கீழே பின்னிணைப்பில் கொடுக்கப்பட்ட சில ஓவியங்களின் மூலம் அச்சிறுகதையின் கதையோட்டம் என்னவாக இருக்கக்கூடும் என்னும் கற்பனை ஓட்டத்தில் சிறுகதையைப் படிக்க ஆர்வத்தைத் தூண்டுகிறது என்பதை உறுதியாகக் கூறலாம்.

மலேசியா தமிழ் நாளிதழ்களில் பல சிறுகதைகள் வெளியிடப்படுகின்றன. அதிலிருந்து இவ்வாண்டு வெளிவந்த சிறுகதைகளில் *'திடீர் வெள்ளம்'* (குப்புசாமி, **2018)**[7], *மறக்க முடியாத அந்த வீடு* ( சந்திரன், **2018** )[8], *'நூலறந்த பட்டம்'* (இளமுருகு, 2018)[9] மற்றும் *'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு'* (கோவிந், மக்கள் தொண்டே மகேசன் தொண்டு, **2018)**[10] ஆகிய நான்கு சிறுகதைகள் இவ்வாய்விற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஆகவே, ஓவியர் கஷ்வியால் இந்நான்கு சிறுகதைகளுக்கும் வரையப்பட்ட ஓவியங்கள் இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இச்சிறுகதைகளுக்கு உயிர்கொடுத்த ஓவியர் கஷ்வி, அவர் வரைந்த ஓவியம் கதையின் கருப்பொருளை விளக்கும் ஒரு கருவியாகக் கையாளப்பட்டதே இவ்வாய்வின் கண்டுபிடிப்பாகும்.

சிறுகதைகளுக்கு ஓவியம் வரையும் போது கதைமாந்தர்களின் உருவம், உடை, வடிவம் ,சூழல், இயல்பான தன்மை கொண்டிருந்தாலும் ஒவ்வொரு ஓவியமும் அதன் கதைக்கு ஏற்றவாறு ஓவியனின் தனித்துவமான காட்சியை எடுத்துரைக்கும் அவரின் ஆற்றலைக் காணலாம். கதைக்கருவை மையமாகக் கொண்டு, ஒரு கதைக்கு முழுவதுமாய் வரையப்பட்ட ஓவியம் வாசகர்களுக்கு அக்கதையை வாசிக்க ஆர்வத்தைத் தூண்ட வேண்டும் என்பது ஓர் ஓவியரின் எண்ணமாகும். எடுத்துக்காட்டாக, மலேசிய நண்பனில் வெளிவந்த *'நூலறுந்த பட்டம்'* சிறுகதையைக் காணலாம். இச்சிறுகதையை எழுதியவர் இர.சா.இளமுருகு ***(இ.சஇளமுருகு, 2018)***[9]. காட்சிப்படம் வரைந்தவர் ஓவியர் கஷ்வி. இச்சிறுகதைக்காக வரையப்பட்டக் காட்சிப்படத்தில் ஒரு பெண்மணி ஏதோ ஒரு பிரச்சனையில் சிக்கித் தவிக்கும் சூழலைக் காட்டுகிறது. இச்சிறுகதையைக் காணும் வாசகர்கள் அவர்தம் முதல் பார்வையில், அப்பெண்மணி மனம் அவதியுற்று அழும் காட்சி வாசகர்களின் மனதை நெருடும் வண்ணம் காணப்படுகிறது. வாசகர்களின் சிந்தனையில், கதைச்சூழலில் ஏன் கதைமாந்தர் கதறி அழுகிறாள், ஆறுதல் கூறுபவர் யார், கதைமாந்தர் இருவருக்கும் என்ன உறவு, கதைமாந்தர் கதறி அழுவதற்கான காரணம் என்ன? என பல கேள்விகள் கற்பனையில் ஓட, கதையோட்டம் என்னவாக இருக்கக்கூடும் என்ற ஆவல், அச்சிறுகதையைப் படிக்கத் தூண்டுகிறது. ஓவியர் வரைந்த இக்காட்சிப்படத்தில் கதைமாந்தர் கதறி அழும் தோற்றம் உயிரோட்டமாகவும் மனதை உருக்கும் வகையில் அமைந்துள்ளது. ஆகவே இம்மாதிரியான ஓவியம் சிறுகதையை வாசிக்க பெரும் பங்கினை வகிக்கிறது என்பதைக் காணலாம்.

## முடிவுரை

ஒவ்வொரு ஓவியமும் ஒரு சிறுகதையைப் போன்றது. அப்படிதான் ஒவ்வொரு ஓவியமும் வரையப்பட வேண்டும் என்பது எனது ஆய்வின் கருத்தாகும். புனையா ஓவியத்தைவிட வண்ண ஓவியத்திற்கு வரவேற்பு அதிகமாகவே உள்ளது. வாசகர்களைக் கதைகளின் மேல் ஈர்ப்பு ஏற்படவே வண்ண ஓவியங்கள் வரையப்படுகின்றன. இதனால் சிறுகதைகளைப் படிக்க மக்களுக்கு ஆர்வம் ஏற்படுகிறது. அத்தோடு மட்டுமல்லாமல் ஓவியங்களோடு சிறுகதைகளை வெளியீடு செய்யும் பதிப்பகங்களுக்கும் நல்ல வரவேற்பையும்

வருமானத்தையும் ஈட்டித்தருகிறது எனக் கூறலாம். மேலும் ஓவியங்களைக் குறித்து வாசிக்கும் வாசகன் கதைகள் எழுதும் சிந்தனையாற்றலைப் பெற்றுவிடுகிறான்; சிறுகதை எழுதவும் தூண்டப்படுகிறான் *(எஸ்.ராமகிருஷ்ணன்,2016).* மேலும்,சிறுகதைகள் எழுதும் ஆற்றலுடைய கதாசிரியர்கள் பெருகுவதற்கான வாய்ப்புகளும் அதிகரிக்கின்றன. மேலும் உரைநடை இலக்கியமான சிறுகதைகளும் தன்னை அறியாமலே மக்களிடையே வளர்ந்து வருகிறது. சிறுவர் முதல் பெரியவர் வரை வாசிக்கும் பழக்கமும் மேலோங்குகிறது. எனவே ஓவியம், சிறுகதை வளர்ச்சிக்கு அதன் பங்கினைச் செய்வனே செய்து வருகிறது என இவ்வாய்வு மூலம் காணமுடிகிறது.

**மேற்கோள் நூல்கள்**:


1. Vengadasamy, M, S**.** (2014). *Fine arts (நுண்கலைகள்)***.** Chennai: Naam Tamilar Publications.
2. Senthuraimuthu**.** (1978). *Ayyakalai sixty-four (ஆயக்கலை அறுபத்து நான்கு)***.** Chennai: Nalvazhvu Publications.
3. Manikkanar, A. (1999). *Purananooru: Sources and texts (புறநானூறு: மூலமும் உரையும்)*. Chennai: Varthamanan Publications.
4. Aalis, A, A, M. (2004). *Pathirthupattu: Sources and texts பதிற்றுப்பத்து: மூலமும் உரையும்).* Chennai: New Century Book House.
5. Sokkan, N. (2010). *Maninegalai (மணிமேகலை)*. Chennai: Kizhaku Publications.
6. Potuvan, M, S. (February 2018). *Nedunalvaadai (நெடுநெல்வாடை)*. Chennai: Gangai Puthaga Nilayam Publications.
7. Kupusamya, V. (2018, February Sunday) Malaysia Nanban (மலேசிய நண்பன்). *Sudden Flood. Short Story (திடீர் வெள்ளம். சிறுகதை, p. 6).*
8. Santhiran, Y. (2018, February Sunday) Malaysia Nanban (மலேசிய நண்பன்). *Unforgettable House. Short Story (மறக்க முடியாத அந்த வீடு. சிறுகதை, p. 3)*
9. Elamurugu, E, S. (2018, February Sunday) Malaysia Nanban (மலேசிய நண்பன்). *Threadless Kite, Short Story (நூலறந்த பட்டம். சிறுகதை, p. 4)*
10. கோவிந், ஜ. (2018, March Sunday) Malaysia Nanban (மலேசிய நண்பன்). *Makkal Tonde Magesan Tondu. Short Story (மக்கள் தொண்டே மகேசன் தொண்டு. சிறுகதை, p. 1).*



**Citation in Tamil**
நாகஜோதி ஆறுமுகம் & முனீஸ்வரன் குமார். (2018). சிறுகதையில் ஓவியம் ஓர் ஆய்வு. *முவாலிம் சமூக அறிவியல் மற்றும் மனிதவியல் ஆய்விதல், 2*(4), 295-301.

**Citation in Tamil @ Romanised**
Nagagothi Arumugam & Muniisvaran Kumar. (2018). Sirukathaiyil oviyam oor aiyu. *Muallim Journal of Social Sciences and Humanities*, *2*(4), 295-301.

**Citation in English**
Nagagothi Arumugam & Muniisvaran Kumar. (2018). Importance of illustration drawing in short stores. *Muallim Journal of Social Sciences and Humanities*, *2*(4), 295-301.

<u>பின்னிணைப்பு</u>




கோவிந், ஜ. *(2018, மார்ச் ஞாயிறு)* மலேசிய நண்பன். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு. *சிறுகதை, p. 1.*



இளமுருகு, இ. ச. *(2018, பிப்ரவரி ஞாயிறு)* மலேசிய நண்பன். நூலறந்த பட்டம். *சிறுகதை, p. 4*




சந்திரன், ய. *(2018, பிப்ரவரி ஞாயிறு)* மலேசிய நண்பன். மறக்க முடியாத அந்த வீடு. *சிறுகதை, p. 3*




குப்புசாமி, வ. *(2018, பிப்ரவரி ஞாயிறு)* மலேசிய நண்பன். திடீர் வெள்ளம். *சிறுகதை, p. 3.*